O.S. No: 87/2015

பெயர் : ராஜலட்சுமி

**வா.சா.1**

16-10-2024

**10 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**என் தகப்பனார் நாகராஜ படையாச்சி. தாத்தா நடேச படையாச்சி 29/09/1966 ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் ஆமாம் .** அதில் ஏ செட்டியூல் சொத்துக்களை என் தகப்பனார் நாகராஜ படையாச்சிக்கும், பி செட்டியூல் சொத்துக்களை தையல் நாயகிக்கும் எழுதி வைத்துள்ளார் என்றால் ஆமாம் . என் தகப்பனார் எங்கள் ஊரிலேயே ஒரு சினிமா தியேட்டர் வைத்து நடத்தி வந்தார் என்றால் பாகஸ்தராக நடத்தி வந்தார் . மேலஅக்ரஹாரத்தை சேர்ந்த நாகராஜன் மற்றும் என் தகப்பனார் நாகராஜன் ஆகியோர் கூட்டாக அந்த சினிமா தியேட்டரை நடத்தினார்கள். என் தகப்பனார் 10/05/2012 இல் பிரதிவாதிகளுக்கு ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் என் தகப்பனார் இறந்ததற்கு பின்னர் தெரியவந்தது . என் தகப்பனார் 2014 இல் இறந்தார். உயில் இருக்கும் விவரத்தை மகேந்திரன் தான் சொன்னார். அந்த உயிலை ரத்து செய்ய கோரி நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. 2015 இல் யார் சொல்லி பஞ்சாயத்து கூட்டப்பட்டது என்றால் எங்கள் குடும்ப உறுப்பினர்கள் மட்டும் பேசினோம் . பேசப்பட்ட தேதி மாதம் ஞாபகமில்லை. 10 வது பிரதிவாதி கிரையம் வாங்கிய விவரம் என் தகப்பனார் இறந்த பிறகு தான் தெரியவந்தது . தேதி ஞாபகமில்லை . பஞ்சாயத்து நடந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் எந்த பஞ்சாயத்தும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 8 பிரதிவாதிகளுக்கு என் தகப்பனார் எழுதி வைத்த உயில் மூலம் சொத்துக்கள் கிடைத்துள்ளது என்றாலும் எனக்கு எந்த சொத்தும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**12 வது பிரதிவாதி இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார் . மேலும் 12 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்**ச்சி

12 வது பிரதிவாதி வாங்கிய சொத்து குறித்து எனக்கு எப்பொழுது தெரியும் என்றால் (வா.சா.ஆ. 28) என் தகப்பனார் இறந்த பிறகு தான் தெரியும். என் தகப்பனார்

2014 இல் இறந்தார். உயில் மூலமாக என் தகப்பனாருக்கு 209/3 சி-யில் 3 ஏக்கர் 61 சென்ட் கிடைத்தது. அதே சர்வே நம்பரில் அது போக 2 ஏக்கர் சொத்து உள்ளது என்றால் அது வேறு நபருக்கு பாத்தியப்பட்டது . அந்த 2 ஏக்கரும் நடேச படையாச்சிக்கு தான் பாத்தியப்பட்டதாக இருந்தது என்றால் சரியல்ல . நாகராஜ படையாச்சிக்கு நடேச படையாச்சியிடமிருந்து வாரிசு முறைமையில் அல்லாமல் ஆவணம் மூலம் தான் சொத்து கிடைத்தது . வேறு முறையில் கிடைக்கவில்லை என்றால் சரி. நடசே படையாச்சியின் மற்ற வாரிசுகளை வழக்கில் தரப்பினராக சேர்த்திருக்கிறேனா என்றால் இல்லை . ஏன் சேர்க்கவில்லை என்பதற்கான காரணத்தை நான் வழக்கில் சொல்லியிருக்கிறேனா என்றால் ஏற்கனவே உயில் மூலம் தையல் நாயகிக்கு சொத்து கிடைத்ததால் சேர்க்கவில்லை . நடேச படையாச்சியின் வாரிசுகளை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை . நடேச படையாச்சியின் வம்சாவளியிடம் பாகம் கேட்டால் இடையில் பதிவு ஆவணம் எதுவும் இருக்கக்கூடாது என்றால் தெரியாது. நடேச படையாச்சி இருக்கும் போதே நான் கூட்டுக் குடும்ப உறுப்பினர் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. நடேச படையாச்சி உயிருடன் இருக்கும் போதே நான் பிறந்து விட்டேன் என்பதும் அப்போதே நான் கூட்டு உரிமையாளராக இருந்தேன் என்ற விவரத்தையும் பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல . உயில் மூலம் கிடைத்ததால் அது வம்சாவளி சொத்துக்கள் என்று நான் சொல்லியிருக்கிறேன் என்றால் அதற்கு முன்பே அது வம்சாவளி சொத்து தான் . நான் அதை நடேச படையாச்சிக்கே வம்சாவளி சொத்து என்று சொல்கிறேன். நடேச படையாச்சிக்கு வம்சாவளி சொத்து என்றால் அவரால் உயில் எழுதி வைக்க முடியாது என்றால் சரியல்ல . சொத்தில் உரிமையே இல்லாமல் விறகப்பட்ட சொத்தில் தவறான ஆதாயம் அடைவதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2009 ஆவணம் மூலம் வேறு சொத்துக்களையும் 12 ஆம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் தெரியாது . நடேச படையாச்சி 1944 இல் கூட்டுக்குடும்பமாக அவருடைய சோதரர்களோடு இருக்கும் போது இந்த

சொத்தை வாங்கியுள்ளார் . அந்த சொத்து வாங்கும் காலத்தில் பெண்களுக்கு உரிமை கிடையாது. 1956 இல் உரிமை வருகிறது என்றால் சரி . நடேச படையாச்சி கூட்டுக்குடும்பமாக இருந்ததால் அவர் எழுதி உயில் செல்லாது என்று நான் எழுதியிருக்கிறேனா என்றால் நான் சொல்லவில்லை . என் வழக்கே உயில் அடிப்படையில் போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.